**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.C.C.No. 28/2025**

**Deposition of Witness for Complainant PW2 (LW2)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **மேகவர்ண பிரபாகரன்** |
| **Father's Name** | : | **முருகேசன்** |
| **Village** | : | **கோத்தகிரி** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **கிராம நிர்வாக அலுவலர்** |
| **Age** | : | **32** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**25.11.2025** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 12.39 P.M (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 31.03.2023ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு நானும், வருவாய் ஆய்வாளர் அருண் என்பவரும் புலத்தணிக்கைகாக ஜக்கநாரை கிராமம், வாட்டர் பால்ஸ் என்ற இடத்திற்கு சென்றிருந்தோம். அப்போது பாலமுருகன் என்பவருக்கு சொந்தமான, பட்டா நிலத்தில் நெடுகுலா கிராமத்தை சேர்ந்த ஆனந்த் என்பவருக்கு சொந்தமான கொப்பட்டா

வண்டியை பயன்படுத்தி மண் எடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் அங்கு சென்று, அவர்களை யார் என்று கேட்க அவர்கள் தங்கள் பெயரை வேம்பு ராஜ், தினேஷ் என்று கூறினார்கள். மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கு உரிய அனுமதி உள்ளதா என்று கேட்டதற்கு, நீங்கள் யாரென்று கேட்டார்கள். அதற்கு வருவாய் ஆய்வாளரான அருண் தான், வருவாய் ஆய்வாளர் என்று சொன்னார். வாகனம் ஓட்டுவதற்கு அனுமதி இல்லை என்றால், கொப்பட்டா வாகனத்தின் சாவியைக்கொ்டுக்க சொல்லி வருவாய் ஆய்வாளர் கேட்டார். அப்பொழுது எதிரிகள் இருவரும் நீ யாருடா புண்டை, நீ RI னா பெரிய இவனா என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள். எதிரி வேம்புராஜ் வருவாய் அலுவலர் கையைப் பிடித்து, கீழே தள்ளிவிட்டு, வாகனத்திலிருந்து SS Steel ஐ எடுத்து, குத்த வர அங்கிருந்து, நானும் வருவாய் அலுவலரும் தப்பி வந்துவிட்டோம். அதன்பிறகு வருவாய் அலுவலர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. நான் 9 வருடமாக கிராம நிர்வாக அலுவலராக பணிசெய்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அலுவலர் என்பதால், ஒரு இடத்திற்கு செல்லும் போது அந்த இடத்திற்கு சர்வே எண், சக்குபந்தி விபரம் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்று சொன்னால் சர்வே எண் மட்டும் தெரிந்து வைத்திருப்போம். குஞ்சபனை பஞ்சாயத்து, ஜக்கனாரை கிராமத்தில் சர்வே எண்களை தெரிந்து வைத்திருப்போம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் குஞ்சபனை பஞ்சாயத்து என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் குஞ்சபனை பஞ்சாயத்தில் ஜக்கனாரை வருவாய்

கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் பிரச்சனை ஏற்பட்டது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். பாலமுருகன் பூமியில், பிரச்சனை ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில், பாலமுருகனை சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பாலமுருகன் பூமி என்பதற்கு புகாருடன் ஆதாரம் இணைத்துள்ளோமா என்றால் இல்லை. பாலமுருகனை இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் இல்லை.

2. பாலமுருகன் பூமி எத்தனை சென்ட் என்றும் அதன் சக்கு பந்தி என்னவென்றும் அந்த பூமி தேயிலை தோட்டம் இருந்ததா அல்லது கற்பூர தோட்டம் இருந்ததா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது முதல் விசாரணையில் எதிரி, திட்டியதாக கூறியுள்ள வார்த்தைகளை புகாரில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். இரண்டு எதிரிகளும், ஒரே நேரத்தில் ஒரே மாதிரி வார்த்தையால் திட்டினார்கள் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான், நீ யாருடா புண்டை, நீ RI னா பெரிய இவனா என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள் என்று கூறியுள்ளேன். சம்பவ இடமானது பொது இடம் என்றும், எதிரிகள் திட்டியதால் பொதுமக்களுக்கு இடையூறாக இருந்தது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் போகும்போது, எதிரிகள் இரும்புக் கம்பியை கையில் வைத்திருந்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. எதிரி வேம்புராஜ் வருவாய் அலுவலர் கையைப் பிடித்து, கீழே தள்ளிவிட்டார் என்று புகாரில் சொல்லவில்லை என்று சொன்னால்

தள்ளிவிட்டார் என்று கூறியுள்ளேன். போலிசார், என்னிடம் வருவாய் ஆய்வாளர் கோத்தகிரி தாசில்தாரரிடம், அனுமதிபெற்று சம்பவ இடத்திற்கு சென்றதாக விசாரித்தார்களா என்றால் அதைப்பற்றி என்னிடம் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்தபோது, இரும்பு கம்பியை வேம்பு ராஜ் எங்கிருந்து எடுத்தார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த இரும்பு கம்பியை போலிசாரிடம் அடையாளம் காண்பித்தேனா என்றால் 31.03.2023 அன்று மாலை 07.00 மணிக்கு இரும்பு கம்பியை அடையாளம் காட்டினேன். நான் புகாரை 31.03.2023 அன்று இரவு 8.30 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகார் கொடுப்பதற்கு முன்பே போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது, இரும்புக் கம்பியை போலிசாரிடம் காண்பித்தோம்.

4. புலத்தணிக்கைகாக சம்பவ இடத்திற்கு சென்றபோது, எதிரிகள் கொப்பட்டா வாகனத்தால் மண் எடுத்து கொண்டிருந்தார்கள். மேற்படி இடமானது அரவேனு டவுனிலிருந்து வாட்டர் பால்ஸ் இடத்திற்கு 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. எதிரிகள் மண் எடுத்துக் கொண்டிருந்ததை புகைப்படம் எடுத்து புகாருடன் இணைக்கவில்லை என்றால் சரிதான், புகைப்படம் எடுத்தோம். 1ம் எதிரி வேம்புராஜ் என்பவர் தூத்துக்குடியைச் சேர்ந்தவர். 2ம் எதிரி இராமநாதபுரத்தை சேர்ந்தவர். எதிரிகள் மண் எடுப்பதற்கு அனுமதி பெற்றிருந்தார்களா என்று விசாரித்தோமா என்றால் விசாரித்தோம். எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்ததை புகைப்படமாக எடுத்து புகாரில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்யவில்லை, ஆனால் புகைப்படம் எடுத்தோம். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்பதால், எதிரிகள் மீது பொய்யான வழக்கு

தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அரசு பணி செய்யவிடாமல் எதிரிகள் தடுத்தார்கள் என்று கூறியுள்ளது பொய் என்று சொன்னாலும் சம்பவத்தன்று நாங்கள் அரசு பணியிலிருந்தோம் என்ற ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எங்களிடம் கேட்கவில்லை என்பதால் கொடுக்கவில்லை. புகாரில் நாங்கள் கிராம நிர்வாக அதிகாரியாக இருப்பதால் எப்போது எந்த நேரத்திலும் பணி செய்யலாம் என்ற விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. வருவாய் ஆய்வாளர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be cor**

**Sd/- G. Amirdham, 25.11.2025**
**Judicial Magistrate,**
**Kotagiri**

**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.C.C.No. 28/2025**

**Deposition of Witness for Complainant PW3 (LW3)**

| | | |
|---|---|---|
| **Name** | : | பிரசாந்த் |
| **Father's Name** | : | **யுவராஜ்** |
| **Village** | : | **கொட்டகொம்பை** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **கூலி வேலை** |
| **Age** | : | **28** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**25.11.2025** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 12.47 P.M (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி தினேஷ் என்பவரை எனக்கு தெரியும். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு அனுமதியின்பேரில் குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. கடந்த 31.03.2023 ம் தேதி, ஜக்கனாரை கிராமம், வாட்டர் பால்ஸ் பகுதியில், குற்ற சம்பவம் நடந்தது தொடர்பாக போலிசார் 01.04.2023ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் வந்து, மாதிரி வரைபடம் தயார் செய்து அதைப் பற்றி எழுதிய பார்வை மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டும், அங்கு சம்பவத்தில் பயன்படுத்திய SS Tool கம்பியை போலிசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றும்போது சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டும், தற்போது ஆஜர் எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 25.11.2025**
**Judicial Magistrate,**
**Kotagiri**